# பத்திரிக்கை செய்தி

## அரசு ஒப்பந்தத்தில் செய்த வேலைக்கான பில்லை பாஸ் செய்வதற்காக ரூ.7,500/- லஞ்சம் கேட்டு பெற்ற மேற்பார்வையாளர் கைது

புகார்தாரர் கருப்பசாமி, உத்தமபாளையம் தாலுகா, தேனி மாவட்டம் அவர்கள் கருமாத்துபாளையத்தில் தனியார் காண்ட்ராக்டராக அரசு பணிகளை செய்து வருகிறார். இவர் ஏற்கனவே அரசு ஒப்பந்தப்படி செய்த வேலைகளுக்காக ரூ.1,83,000/-க்கு உண்டான பில்களை சமர்ப்பித்துள்ளார். திரு.ராதாகிருஷ்ணன், மேற்பார்வையாளர், ஊராட்சி மன்ற அலுவலகம், கம்பம், தேனி மாவட்டம் அவர்கள், புகார்தாரர் சமர்பித்த பில்களை அரசிடமிருந்து தொகையினை பெற்றுத்தர தனக்கு லஞ்சமாக ரூ.7,500/- (4% கமிசன்) மற்றும் லஞ்சமாக ரூ.7,500/-ம் ஆக மொத்தம் லஞ்சமாக ரூ.14,500/-கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். பின்னர் தனக்கு முதலில் லஞ்சமாக ரூ.7,500/- கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தேனி பிரிவில் புகார் மனு சமர்பித்துள்ளார். மனுதாரர் கொடுத்த புகார் பேரில் இன்று (28.06.2023) பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.ராதாகிருஷ்ணன், மேற்பார்வையாளர், அவர்கள் புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணம் ரூ.7,500/-யை பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.